375

உ

கடவுள் துணை.

ஸ்ரீசுப்பிரமணியர்

திருவிளையாட்டாகிய

வெளாயற் சிந்து.

இரங்கோன்,

ஆ. க. மு. நாகூர் மீரு சாஹிபு அன்சன்ஸ்

அவர்கள்விருப்பத்தின்படி

P. S. துரைசாமிமுதலியார் அவர்களால்

சென்னை.

[illegible]ஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924

Q26:417
N24
183485

T. சாரதா புத்தகசாலை.

நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்டபோஸ்டு சென்னை.

சங்கீதம்.

ஹார்மோனியம்சங்கீதசுர ஞான சுயபோதினி செட்	2	0
சங்கீதசந்திரிகை	3	8
சங்கீத ரத்தினாவளி	3	0
சங்கீத ஞானபூஷணி	1	8
சங்கீத சுரபூஷணி	0	12
மேற்படி 2-ம் பாகம் காயாமிர்த்தவாஷணி	1	0
சங்கீத சத்சம்பிரதாய தீபி கைமுதல்வால்யம்	4	0

கீர்த்தனைகள்.

பாரதக் கீர்த்தனை	3	8
இராமாயணக்கீர்த்தனைதிக்	2	4
மேற்படி தின்	1	4
இராமாயணம்லூடம் 6 காண்டம் ஏலப்பாட்டு	0	2
பெரிய சின்னசாமிதாஸ் கீர்த்தனை	1	0
சுவாமிநாதசுவாமிஉபதே	0	8
பாராங்குசதாசர்கீர்த்தனை	0	4
பழனியாண்டவர் கீர்த்த	0	3
சிவநாமசங்கீர்த்தனை	0	4
முத்துதாண்டவர் கீர்த்த	0	4
சுப்பிரமணியர் கீர்த்தனை	0	4
மாம்பழகவிராயர் கீர்த்த	0	4
நந்தனார் சரித்திர கீர்த்த	0	6
மேற்படி உயர்ந்த பதிப்பு	0	12
இராமதாஸ்கீர்த்தனை	0	6
வேதநாயகம்பிள்ளை கீர்த்	0	12
ஆஞ்சநேயாகீர்த்தனை	0	2
அச்சுதாசர் கீர்த்தனை	0	4
மேற்படி2-ம்பாகம்	0	8
மேற்படி 3-ம்பாகம்	0	6
தியாகராஜா கீர்த்தனை	0	3
மேற்படி பெரியது	3	0
கார்வண்ணமாலை	0	3
கதிரேசன் ஆனந்தக்களிப்	0	4
பண்டரி கீர்த்தனை	0	4
இந்துஸ்தான்பஜனைக்கீர்	0	4
மயிலாசல கீர்த்தனை	0	5
பாஸ்கரதாஸ் கீர்த்தனை இரண்டுபாகமும்	0	10
பாண்டியதாஸ் கீர்த்தனை	0	5
வெள்ளைசாமிதாஸ் கீர்த்தனை இரண்டு பாகமும்	0	10
சங்கரதாஸ் பக்திரஸகீர்த்	0	3
கோவிந்ததாஸ் இயற்றிய இராமாயண கீர்த்தனை	0	5
முத்துசாமி கவிராயர் பத்திரசகீர்த்தனை 2-பாகமும்	0	8
வேல்சாமி பக்திரச கீர்த்தனை இரண்டுபாகமும்	0	10
பாஸகரதாஸ் இயற்றிய தேசாபிமானிகள் செந்தமிழ் திலகம் இரண்டுபாகமும்	0	12

விலாசங்கள்.

தி. அப்பாவுபிள்ளை சத்தியபாஷாஅரிச்சந்திரவிலா	2	0
ஷை இந்திரசாஸ்	0	6
கிருஷ்ணவிலாசம்	0	8
பாரதவிலாசம்துயிலுரிவு	0	4
வில் வளைப்பு	0	4
நச்சுப்பொய்கை	0	3
வள்ளியம்மை விலாசம்	0	4

நாடகங்கள்.

திருக்குறள் நாடகம்	1	4
சிவசாமிஅரிச்சந்திரநாட	1	4
நீதிநெறிஅரிச்சந்திரநாட	2	0
சந்திரகாச நாடகம்	1	8

உ

கடவுள் துணை.

ஸ்ரீசுப்பிரமணியர்

திருவிளையாட்டாகிய

வளையற் சிந்து.

இரங்கோன்,

ஆ. க. மு. நாகூர் மீருசாஹிபு அன்சன்ஸ்

அவர்கள்விருப்பத்தின்படி

P. S. துரைசாமிமுதலியார் அவர்களால்

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1924

கடவுள் துணை.

ஸ்ரீசுப்பிரமணியர் திருவிளையாட்டாகிய

வளையற் சிந்து.

விநாயகர் துதி.

சீர்நிறைந்த வள்ளிதினைப் புனமேகாக்குஞ்
செயலுணர்ந்தநாரதன்சண் முகன்பாலுற்று
ஏற்நிறைந்தமாதினெழி லெடுத்தங்கோதி
ஏகியபின்குகன்மயலார்ந் தெழுந்தோர்வேடம்
பார்நிறைந்தகொடிகளைவண் டொடியலாக்கிப்
பசியவளைச்செட்டிமாப் பைகோளிட்டுக்
கார்நிறைந்தவனத்தில்வள்ளிக் காகவந்த
கதையுரைக்க கயமுகன்றன் கழல்காப்பாமே.

டிராமாமெட்டுச்சிந்தடி வஞ்சுப்பா.

இ-ம்-இந்துஸ்தானி-காப்பி-அடதாளம்.

செந்தில்வடிவேலவன்மேற் சிந்துதமிழ்பாட—முன்னால்
வந்தவினையோட—வரந்
தந்திடுங்கைக்கூட—இதைச்
செஞ்சொன்மிகுந்தஞ்சைவெள்ளைக்—குஞ்சரங்காப்பாமே 1

மந்தரஞ்சேர்குறத்திவள்ளி மாதையணைந்தோனே....திரு
மாலின்மருகோனே—ஒரு
போதுமறவேனே— இணை
மலர்ப்பதத்தைத் துதிப்பதற்கு—வரமருள் சீமானே 2

தீராதவல்வினையைத் தீர்க்கும்வடிவேலன்—புகழ்
ஏர்க்குமுமைபாலன்—எனைக்
சார்க்குமனுகூலன்—வளைச்
செட்டிகதைகூறவரி—மட்டலர் தாட்டுணையே 3

மஞ்சுலவுந்தினைப்புனத்தில் வள்ளியின் மேனினைவாய்ச் - சுகங்
கொள்ளமனங்கனிவாய்—புறம்
உள்ளமிகத்துணிவாய்க்—குகனை
வளையற்செட்டியாங்கதைக்கு—மலர்மகள்காப்பாமே 4

பஞ்சவிலக்கணநிபுணன் பாரதிநாவாசன்—சிலை
மாரனும்பிரகாசன்—எழுத்
தூரன்குகதாசன்—ஜகம
பரவியசண்முகமென்குரு—திருவடியைப்பணிவாம் 5

183485

ஆயிரத்தெண்ணூற்றுதொண்ணூற்ருறுமந்துசூலை—மதி
வாரவந்தக்காலை—புனர்
பூசநல்லதாலே—தமிழ்
ஆக்கியோன்பேரறியவெனிற் பார்த்துக்கொள்—பின்னாலே 6

தஞ்சைகரந்தையட்டாவ தானிகுணபோஜன்—ராம
சாமிகவிராஜன்—புவி
ராசர்மெச்சுநேசன்—சிந்து
தானிசைத்திட்டானுலகும் வான்புகழ்—விஸ்வாசன் 7

நூல்.

தோராதசூர்மனுயிர் தொலைத்தமயில்வாகன்—அயன்
முனிக்கருள்செய்யோகன்—வள்ளி
கொடிக்குமனுபோகன்—சிவ
சுப்பிரமணியர்சொடிகளைப் பைந்தொடியமைத்—திட்டாரே 8

வளையன்மரகதவயிர வர்ணமதுதோர்க்கும்—பெண்கள்
மனதையுள்ளார்க்குஞ்—செட்டி
வருவதைக்கண்பார்க்கு—வள்ளி
வசிக்குந்தினைப்புனந்தனக்கு வள்ளல்பத—நோக்கும் 9

வளையலைத்தோளணிந்துகையில்வாங்கியதண்டேன்றி—புயிர்
வனகண்டனைத்தாண்டி—ஸ்ரீ
மாயவனைவேண்டிக்—கிழ
வடிவமென்னநரைதிரைகள்—வயதுமிகத்தோன்றி 10

குத்திருமலோடுகையிற் கோற்பலமாய்நடந்து—மலை
குகைவனங்கள்கடந்து—வனக்
குறவர்மலைதுடர்ந்து—வள்ளி
குறற்றுனித்துக் கவணெரியுங்குறிஞ்சியைக்—கண்டடைந்து 11

பாங்கியர்களின்றிவள்ளி பரணதனின்மேவ—தினை
பயிர்விளைவுண்டாக—கிள்ளை
பறவைகட்குக்காவல்—மிகு
பதனமாய்க் கவணெரியாள்—பக்ஷிகள்மேற்றுவ 12

சுந்தரமின்வள்ளியெழிற் சுந்தனுங்கண்டானே—மனச்
சோபமாய்நின்றானே—வளை
துலங்கிடகுன்றானே—ஓஓ
தோகையர்கள்வளையலென்றே—துவளநடந்தானே 13

வளைவிக்கிறசெட்டிதனை வள்ளியுங்கண்பார்த்து—வளை
வர்ணமோபொன்மாத்து—இவன்
வருகிறதேக்கூத்து—ஐயா
வாருமிங்கே தொடியெனக்கு—வாங்குவன்காண்தீர்த்து 14

கிள்ளைமொழிவள்ளிஐயா கிழவனென்றதாலே—செவி
சேட்காதவன்போலே—மனக்
கெருவமுடன்சோலை—ஊன்றிக்
கிட்டியேதள்ளாடிபாண்—முட்ட நுழைந்தாரே 15

வாருமையாவளையல்செட்டிவளையல்விலைகூறும்—நீர்
மகிழ்ந்து தகையாறும்—பசி
வன்கொடுமைதீரும்—எந்த
மாநகரம்பேரினங்கள்—வகைவிபரங்கூறும் 16

மங்கையரேநானிருக்கும் வடபழனிதேசம்—அதிற்
பெரியவர்கணேசம்—தொழில்
வளைசெய்பிரகாசன்—ஏழை
வருத்தக்தினாற்காட்டினிட—வழியில்வந்தேன்மோசம் 17

வளையல்செட்டியாரேமோசம் வருவதுமொன்றுமில்லை—வேடர்
வாழ்குமிந்தயெல்லை—கதிர்
வளருந்தினைக்கொல்லை—குற
மாதுவள்ளிநானேகாவற் வனத்திலென்று—தொல்லை 18

பெண்ணரசேவளையல்விற்றே பிழைப்பதென்னாளும்-இங்கே
பேசுவரைக்காணும்—வளை
பெறுமி மாய்த்தோணும்—வாங்கிப்
பெற்றவுடன்கல்யாணம் பெண்களுக்கே—காணும் 19

அழகானவளையல்விலை யரிவையற்குமுன்னால்—நீர்
அடுக்கும்விலைசொன்னால்—எடுத்
தணிவேன்கரந்தன்னால்—எங்கள்
அண்ணன்வருமுன்னம் விலைதன்னைச்சொல்லு—மென்னால் 20

பச்சைவளைமிச்சம்பதி னாறுலக்ஷந்தானே—விலை
பகர்வேன்மச்சமானே—மகா
வுயர்வுளதுதானே—இதை
பார்க்கப்பசிதீருங்காண்—சேர்க்கவேசெந்தேனே 21

அணிவயிரமாயிரப்பொ னன்னநடைமாதே—விலை
சொன்னதுதப்பாதே—ஒளிர்
மின்னலுமொப்பாதே—இதை
அணிபவர்க்கே கலியாணம்—ஆகிவிடுமப்போதே 22

வார்த்தைமெத்தபேசுகிறீர் வளையல்செட்டிநீரும்—உமக்
கழகல்லகாண்போரும்—கைக்கு
வரும்விலையைக்கூறும்—பாங்கி
மார்கள்வருவார்கள்விலை—வகையுடனேதீரும் 23

தங்கவளைக்கங்கணங்க ணங்கையுனக்கினமாய்—நானே
தருவேனல்லகுணமா—நீயும்
அணிவாய்மகிமனமா—புன்றன்
றவளநகையி தழுமிரு—தணந்தருவாய்சுகமா 2

போங்காணும்வயதுசென்று புத்தி கெட்டசெட்டி—யூரைச்
சுற்றிடுங்காமாட்டி—காமப்
புத்திகொண்டுவிட்டீர்—வளை
பொருந்தவிலையுகந்திடசொற்—றருவன்றங்கக்கட்டி 25

சரசமுடன்வளையலிடுஞ் சாதியினன்செட்டி குலந்
தவறுவனேகுட்டி—வசைத்
தாலுஞ்சீனிக்கட்டி—கொஞ்சந்
தயவுசெய்துன்றனந்தருவாய் சமயமென்னைக்கிட்டி 26

விறைவுடனேவளையலிட்டால் வேணபொருட்டாரேன்—பொல்லா
வீண்வார்த்தைகூறுதே—மிகு
விருத்தரல்லோநீயே—வன
வேடரண்ணன்மார்கள்வரு—வேளையறிவீரே 27

வாரும் வள்ளிமாதேயென்று வளையதனையெடுத்தார்—எட்டி
வலதுகையைபிடித்தார்—கையை
மாது தள்ளிவிடுத்தாள்—பித்த
மயக்கந்தலைக்கேறுதென்றே—மயங்கியேகீழ்படுத்தார் 28

வளையற்செட்டிகிழவன் விழுமார்க்கமதைக்கண்டாள்—என்ன
வாதையையோவென்றாள்—அண்ணன்
மார்வருவாளென்றாள்—ஐயா
வளையற்விற்கும்பெரியவரே—யெழுந்தருளுமென்றாள் 29

பசித்துறக்கம்வருவதினாற் படுத்தேனடிமாதே—நீயுந்
தப்பதுமொவ்வாதே—யுன்னை
அடுத்ததுவீண்வாதே—நான்
படுத்தற்குப்பாதிவிலை—யெடுத்துக்கொள்ளிப்போது 30

கிழப்படுவேயுனக்குவந்த சேடிதென்னவம்பு—எங்கள்
கிளையோகுறக்கும்பு—வீணாய்
பழிகள்வரும்பின்பு—நான்
கிளருமொழிகேட்டெழுந்தாற்—கெடுதியில்லைநம்பு 31

குறவழக்கிட்டாலுமெந்தன் குறிப்புவிட்டுப்போமோ—மனக்
கரிப்பெனக்குண்டாமோ—வனப்
புகழுனக்கீதாமோ—மிக
குறவர்வந்தேயென்னைவதைத்தாற் - பழிகொலைவீண்போமோ 32

வளையல்விற்றேபிழைக்கவிங்கே வந்தக்கிழச்செட்டி - உந்தன்
சிந்தைமிகக்கெட்டி - என்ன
விந்தையடாமட்டி - அண்ணன்
மாரறிந்தாலுன்னுயிரை - வாங்குவார் போயெட்டி 33

வளையலெல்லாம்மெடுத்துக்கோடி மாதெனைப்பேசாதே - சேரச்
சூடுதெனக்கூசாதே - மன
வாதனைப்பொல்லாதே - உந்தன்
மலர்க்கரந்தந்தாலொழிய - யெழுந்திடேனிப்போதே 34

நரைத்தகிழப்படுவாயுனை நானேயைப்பிடிப்பேன் - யிந்தக்
கானகக்கொம்பாலடிப்பேன் - பழம்
பானையைப்போட்டுடைப்பேன் - யெல்லா
நமனுவந்தானிவன்கதையை நானெங்கேபோயுரைப்பேன் 35
வனக்குயிலேகுறக்கொடியே வாதனைப்பண்ணாதே - என்னை
வைவதுமேயெண்ணாதே - மணஞ்
செய்குவேனென்னாதே - உந்தன்
மலர்க்கரங்கொட்டடித்தாலுமே - மகிழ்வேன் கண்ணாலே 36
கூனக்கிழப்படுவாநரைகுடிகெடுத்தசெட்டி - யுனைக்
கொடுங்கயத்தாறகட்டித் - பலி
கொளுங்கலத்தில்வெட்டிப் - போடக்
கொண்டுபோக அண்ணன்வரு - வார்கள்போடாசெட்டி 37
எட்டிநடவென்ற வள்ளிக் குட டிக்குறகுட்டி - என்னைத்
திட்டுறாய்வாய்பட்டி - தாலி
கட்டுவேன்பார்கிட்டி - நீயும்
ஏசினதாலிவ்விடம்விட்டு - யெழும்புவேனோசெட்டி 38
அலைந்துகெட்டேவளையல்விற்கு மறிவுகெட்டமூடா - குலத்
தரிவைகிட்டுமோடா - மண
மாகுமாவீண்போடா - கெட்ட
அகந்தைசொல்லாதெழுந்தினைப் - புனங்கடந்தேபோடா 39
பெண்ணரசேயெனக்குப்பசி பிழைக்கேனடிவள்ளி - எனைப்
பேசாதடிகள்ளி - யுயிர்
போகுமடிதுள்ளி - நான்
பிழைக்கவென்றுலிடித்ததினை - யுழக்குத்தாடிதெள்ளி 40
பசியெனுஞ்சொற்கேட்டவுடன் பரிந்துவள்ளிமானுள் - தினை
புரிந்தமாவைதேனுல் - விட்டுப்
பிசைந்துருட்டலானுள் - உண்ணும்
பக்குவமாகக்கொடுக்கத்தின்றே - விக்கிக்கொண்டான்ருனும் 41
போகுதடியுயிருடலைப் புரிந்துவெகுநண்ணி - விட்டுப்
போகுமுன்னேதண்ணீர் கொஞ்சம்
புகட்டிவாயுன்னி - யுயிர்
போகுதடிபோகுதடி போடிகுறக்கண்ணி 42
திகைத்துவள்ளி கறத்தைப்பற்றியிழுத்துதண்ணீர்சுனைக்கேவெளி
விடுத்தாளந்துரைக்கே - தண்ணீர்
குடித்துவயிர்பொறுக்கே - என்று
தேன்மொழியாளுணர்ந்ததே - யேறிவந்தாள்கரைக்கே 43
வள்ளிகரையேறிடுமுன் றள்ளாடியேக்கிழவன் - சுனை
குள்ளாகபோய்விழுவன் - குற
வள்ளியைகைதொழுவன் - என்னை
மாளச்சுனைதனிற்றள்ளிப் - போனயாவென்றழுவான் 4

வளையற்செட்டிசனிபிடிப்பான் வந்ததென்னகாவம் - இவன்
விந்தையலங்கோலம் - என்ன
சிந்தைஇந்திரஜாலம்- ஏறி
வாடா கெட்டுப்போவாயென்ற - வலதுகைபீந்தாளாம் 45
கொடுத்தகையைப்பிடித்தான் சுனைக்குள்ளேமிகத்தாழ - வள்ளி
தள்ளாடிகீழ்வீழ - இவன்
துள்ளிக்கைமேல்நீள - வள்ளி
கூக்குரலிட்டாள்கிழவன் - நோக்கிகைமீள 46
மாதுடனேகிழவனிந்த வகையாநிற்குங்காலை - தினை
வனத்தினருகாலே - வேடர்
வருவதைக்கண்ணாலே - கண்டு
வளரும்வேங்கைமரமதானன் - நிழலிடமென்மேலே 47
நதியாடிவருபவள்போல் நங்கைவள்ளிமாது - கிழ
வன்காணச்சூது - அண்ணர்
கண்காணரீது - சொல்ல
நாண்முற்றேவேடர்முன்போய்த் தோணினனப்போது 48
தங்கைவள்ளிவுனைப்பார்த்து மங்களமாய்த்தானே - உயிர்
வெங்கள்குலமானே - பரண்
தங்குமிடந்தேனே - என்றுங்
தலத்திலில்லாவேங்கைமர - முளைத்ததெப்போதேனே 49
அண்ணர்களேயான்காக்கு மரியதினைக்கொல்லை - இஙகே
மரமிருப்பதில்லை - என்ன
வருமோவிதிற்றொல்லை - இதை
அறவெட்டுங்கள்கிளப்பிடலா - மதிசயமொன்றில்லை 50
தங்கைபரேநீயிருந்து தானேவிளையாட - நிழல்
மேலேபந்தலாடத் - தென்றல்
வீசுமீதிற்கூட - மரந்
தன்னிடத்தில்நம்மள்கந்த - சாமிபூசைபோட 51
என்றுசொல்லிவேடர்வன மேகியபின்னாலே - மரம்
ஆகியோபின்னாலே - மைபல்
மோசமாய்ப்பெண்மேலே - வேடம்
எடுத்துச் சந்நியாசியைப்போல் - அடுத்தான்வள்ளிநேரே 52
ஆண்டியைப்போலாகிவள்ளி யம்மையிடஞ்சென்றான் - பூதி
வெண்மையுறநின்றான் - வள்ளிப்
பெண்மயிலேயென்றான் - எந்தன்
ஆசையைத்தீராதிருந்தால் - மோசமல்லோவென்றான் 53
முன்னாலொருகிழவன்வந்து தண்ணியிற்போய்விழுந்தான் - வளை
தன்னையுங்கையிழந்தான் - அவன்
என்னமோபேரிழந்தான் - அந்த
மோசத்தைப்போலாண்டிக்கெரப்ப - நாசம்வந்துபுகுந்தாய் 54

முடிவென்க்குற்றாலுமண முடிக்காமற்போவேனா-தனம்
பிடிக்காமற்சாவேனோ-இதழ்
குடிக்காமல்மீள்வேனோ-வேறே
மொழியுரைக்கலாமோவாண்டி-யெளியேன்மேல்வீம்பேனோ 55
ஆண்டிகெட்டகேட்டுக்குப் பெண்வேண்டுமோநிர்மூடா-எல்லை
தாண்டிவெளிபோடா-கண்ணைத்
தோண்டுவேன்பேய்மூடா-வுன்னை
அடித்துச்சிரமுடைப்பேனென்ன-வாணவஞ்சிபோடா 56
நீயடிக்கமோக்ஷமிந்த நிமிடத்தினின்றானே-கிட்டும்
வரிசைகுறமானே-என்னைப்
பிரியத்துடன்றானே-கொஞ்ச
நினைக்காமலாண்பிள்ளையென்றே-வலசகிருய்செந்தேனே 57
பேசிவெட்கமில்லையடா பிச்சைகோமணாண்டி-மகா
லச்சையோபெட்டாண்டி - சோறு
மிச்சமாய்த்தின்பாண்டி - குறப்
பெண்ணான்பயப்படுவனடா எண்ணாதே-யோட்டாண்டி 58
பயமுனக்கில்லாதுநிசம் பாவைக்குறக்கன்னி - என்ற
பரனடியைபுன்னி - அண்ணன்
கரிமுகனை எண்ணி - நிற்கப்
பருவதம்போல்யானைதினைப் - புனத்தில்வந்தேநண்ணி 59
மும்மதங்கள்பொழியவண்ட முகடுகளும்வெடிக்க-மரக்
குவடுகள்பேர்த்தடிக்க - ஆண்டி
குனிந்தோட்டமேபிடிக்க - வள்ளி
மூரித்துக்கையைநெரித்தாண்டியை - மரித்துக்சட்டிப்பிடிக்க 60
ஆனைவந்தேகொல்லுமடி யரிவையெட்டிகோடி - யுங்கள்
குறவர்க்குச்சிறப்போடி - நீயோ
செருவங்கொண்டதேடி - பெண்ணில்
அதிசயமோகுறத்திஎன்னை - மருவவென்றால்வாடி 61
உடல்பொருளாவிக்கண் முதலொப்புக்கொள்வாய்நிசமே - இது
தப்பாது சத்தியமே - ஐயா
ஒப்புவேநிச்சயமே - என்று
உரியமொழிபகரவள்ளி - சயமானான் சண்முகனே 62
அறுமுகனைகண்டாள் மதயானையைக்கண்காணாள் - கந்த
சாமியுறவானாள் - குற
மாதுமயலானாள் - செய்த
அபசாரமன்னிப்பீரிந்த - அடி[illegible] 63
சண்முகனுமகிழ்ந்துகையாற் றழுவி[illegible]போட்டணைத்து - சுகம்
பெருகத்தன்னோடமைத்து - என்றும்
பிரியமதாய்ச்சுகித்துக் - கந்த
சாமிவள்ளியாருடனே - சந்ததம்வாழ்ந்தாரே.

ஸ்ரீசுப்பிரமணியர் வளையற்சிந்து - முற்றிற்று.

183485

T. சாரதா புத்தகசாலை.
நெ. 23, பாளையப்பன் தெருவு, மின்ட்போஸ்டு, சென்னை.

அதிநூதனம்! (புதியபதிப்பு) வெளிவந்துவிட்டது!

ஆலந்தூர் ஒரிஜினல் டிரமாடிக் கம்பெனியின்
உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, வித்வான்
வேலூர்- நாராயணசாமி பிள்ளை அவர்களா லியற்றிய
ஸ்ரீமத் ராமாயணம்—மாருதி விஜயமென்னும்

லங்கா தஹனம் (டிராமா)

இச்சரிதையில் ஸ்ரீராமபிரான் ஜானகி பிராட்டியாரின் பிரிவாற்றுமையால் வருந்துவதும்பின்சுக்ரீவன்வராததால்கோபாவேசமுறுவதும், பிறகு தணிந்து ஆஞ்சநேயரிடம் தன் கணையாழியைக் கொடுத்தனுப்புவது முதல் மாருதி லங்கையைத்தாண்டி லங்கணியை வதைத்து ஜானகி பிராட்டியாரைத்தேடிகடைசியாகஅசோகவனத்திற்கண்டு தன் விஸ்வரூபத்தை காட்டிதேருதல்சொல்லி தான் அம்மனைக் கண்டதற்கடையாளமாக சூடாமணியைப்பெறுவதும் அக்ஷயனை மடித்து அநேக ராக்ஷதரை வதைத்து ராவணனேடுவாதுபுரிந்து லங்கையை தஹனம் செய்தல் வரையில் முடிவு பெற்றிருக்கிறது. இதில் ஒவ்வொரு பாடல்களுக்கும் தலைப்பில்வர்ணமெட்டுகளும் குறிப்பிட்டிருக்கிறது இதன் விலை அணா 4

அதியுல்லாச சல்லாப லாவணி.

எரியாதகட்சி- எரிந்தகட்சி.

ஐயா! ஆவலுடன் லாவணி வாசிக்கும் அன்பர்களும்இன்னும் மற்று முள்ளோர்களும் இன்பமோடறிவிப்ப தென்ன வென்றால் சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளையும் ஆராதர ஜீவோற்பத்தி முதலான விஷயங்களை எளிதில்தெரிந்துக்கொள்வதற்குஇதுவே அறியநூல், இதில் காமதகனன்பேரில் எரிந்தக்கட்சி பாடலும் லாவணி சண்டமாருதம் தி. வைத்தியலிங்கம்பிள்ளை பாடலும் நாகைவெளி காயாரோகம் பிள்ளை பாடலும் நா. வெ. கோவிந்தசாமி உபாத்தியாயர் பாடலும் க, இராமசாமி உபாத்தியாயர் பாடலும் சுப்பிரமணியம் பிள்ளை பாடலும் கருப்பண்ண பிள்ளை பாடலும் இந்த ஒன்பது வித்வான்கள் பாடலும்ஒரேகோர்வையாகக் திரட்டி அச்சிட்டிருப்பதால் வேண்டியவர்கள் எமது விலாசப்படி எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் விலை அணா-6. வி. பி. தபாற்கூலி அணா-3.

சீகாளத்தி புராண வசனம். விலை அணா-6

இதில் சீகாளத்தி க்ஷேத்திரத்தில் முக்திப்பெற்ற அடியார்களின் சரிதையை விவரித்திருக்கிறது. (திருவுருப்படங்களுடன்)

வாருங்கள் ! வந்துபாருங்கள் !! களிகூருங்கள் !!!
சந்தோஷங் கொண்டாடுங்கள் !!!!

ரஞ்சிதகதா புத்தகசாலை.

நண்பர்களே ! கவனியுங்கள். கவனியுங்கள்

நமது புத்தகசாலையில் நவீன நாவல்கள், நாடகங்கள், கதைகள், புராணங்கள், காவியங்கள், கீர்த்தனைகள், சரித்திரங்கள், டிராமாக்கள், விலாசங்கள், வைத்தியங்கள், சோதிடங்கள், வேதாந்தம், சித்தாந்தம், ஸ்கூல் தினுசுகள், தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், ஒக்கப்பிலேரிகளும், ரவிவர்மா படங்களும், முகம் பார்க்கும் கண்ணாடிகளும், முஸ்லீம் அறபு வாக்கிய எழுத்துப் படங்களும், தோல், பூட்ஸ், ஷூஸ், சிலிப்பர் முதலிய சகல சாமான்களும் விலை சகாயமாய் விற்கப்படும், நேரிலும் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் ஆர்டர்களை கவனித்து வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வேண்டிய கனவான்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

எமது விலாசம்,

ரஞ்சிதகதா புத்தகசாலை,

ஆ. க. மு. நாகூர் மீரு சாஹிபு அன் சன்ஸ்.

நெ. 79, பிரேசர் ஸ்ட்ரீட்டு, இரங்கூன்.